**அ.வ.எண்.120/2022**

**வா.சா.1 : சுசீலா**

**தேதி : 04.09.2025**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சுப்பண்ணகவுண்டர், செல்லப்பகவுண்டர், கருப்பண்ணகவுண்டர் ஆகியோர் 24.05.1965 ஆம் தேதியன்று ஒரு பாகப்பிரிவினை செய்து அதனை பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பாகப்பிரிவினையில் ஏ அட்டவணை சொத்து கருப்பண்ணகவுண்டருக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். கருப்பண்ணகவுண்டருக்கு முதலாம் பிரதிவாதி கந்தசாமி என்ற ஒரு மகன் மட்டும் என்று சொன்னால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி சிறு வயதிலேயே ஈரோட்டில் உள்ள அவரது மாமா வீட்டிற்கு தொழில் செய்ய சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1965 ஆம் ஆண்டு பாகக்கறாரில் உள்ள ஏ அட்டவணை சொத்துக்களை என் தகப்பனாரின் தகப்பனார் கருப்பண்ணகவுண்டர் மட்டும் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி ஈரோட்டில் கரும்பு அடிக்கும் ஆலை, கடலை பருப்பு உடைக்கும் இயந்திரம் ஆகியவற்றை வைத்து வியாபாரம் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. 1972, 1973 ல் 1 ஆம் பிரதிவாதியான உங்கள் தகப்பனார் ஈரோட்டில் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1975 ஆம் ஆண்டு நான் பிறந்தேன். 13.12.1972 ல் ஒரு சொத்தினை கிரையம் பெற்றுள்ளார், அவர் எவ்வாறு கியைம்

பெற்றுள்ளார் என்பது உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான், ஆனால் எங்கள் தாத்தா எவ்வாறு சொத்தை கிரையம் பெற்றார் என்று சொல்லி எனக்கு தெரியும். 09.03.1975 ஆம் தேதியன்று முத்துலட்சுமி என்பவரிடம் கிரையம் வாங்கியுள்ளார், அவர் எந்த வருமானம் மூலம் கிரையம் பெற்றார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். உங்கள் தாத்தா கருப்பண்ணகவுண்டர் எவ்வாறு சொத்தினை வாங்கினார் என்ற விபரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் என் தாத்தா சொல்லி எனக்கு தெரியும். நீங்கள் பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை வைத்துதான் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று பொய்யாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு எந்த வருமானமும் இல்லை என்றும், பி அட்டவணை 1 மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்கள் ஒரே மகன் என்பதால் 1 ஆம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்றதாக பொய்யாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. உங்களுடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் நான்கு நபர்கள் என்று சொன்னால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிதான் வாதிகளுக்கும் மற்றும் 2 ஆம் பிரதிவாதிக்கும் திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் 1 ஆம் பிரதிவாதி மற்றும் என் தாத்தாவும் சேர்ந்துதான் திருமணம் செய்து வைத்தார்கள். உங்கள் திருமணத்திற்கு 40 பவுன் நகை போட்டு திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள்

திருமணம் ஆனதிலிருந்து உங்கள் கணவர் வீட்டில்தான் வசித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் திருமணத்திற்கு பிறகு எங்கு குடியிருந்து வந்தீர்கள் என்றால் நான் திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் என் கணவர் வீட்டிலும், அதன் பிறகு 1 ஆம் பிரதிவாதி வீட்டிலும் குடியிருந்தேன். தற்போது நீங்கள் உங்கள் கணவருடன்தான் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 வாதிகள் அவர்கள் அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 ஆம் வாதி முத்தூரில் அவரது கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார். 2 ஆம் வாதி ராசம்பாளையம் அவரது கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார். 1 மற்றும் 2 ஆம் வாதிகள் அவரவர் திருமண தேதியிலிருந்து அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அவரவர் கணவர் வீட்டில் உள்ள விவசாயத்தை கவனித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா கருப்பண்ணகவுண்டர் இறந்த பிறகு 1 ஆம் பிரதிவாதிதான் ஏ, பி தாவா சொத்துக்களை பராமரித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்து 1 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. 09.03.1975 ஆம் தேதிய கிரைய ஆவண எண்.282/75 சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு 1 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். 2 ஆம் பிரதிவாதிக்கு, 1 ஆம் பிரதிவாதி 22.02.2021 அன்று ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இதுகுறித்து எனக்கு தெரிய வந்தது. மேற்சொன்ன செட்டில்மெண்ட் சொத்தில் உங்களுக்கு 1/5 பாகம்

இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாத்தா கருப்பண்ணகவுண்டருக்கு நேரடி வாரிசான 1 ஆம் பிரதிவாதி கந்தசாமிதான் வாரிசு என்று சொன்னால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு மேற்சொன்ன வாரிசு அடிப்படையில் தாவாச்சொத்துக்கள் அவர் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. 22.02.2021 அன்று ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்து தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்தி வைத்துள்ளார் என்று நீங்கள் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா செட்டில்மெண்ட் சொத்தில் உங்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்தில் வாதிகளுக்கு 3/5 பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. டிசம்பர் மாதம் 2021 ஆம் ஆண்டில் நீங்கள் தாவாச்சொத்தில் பாகம் கேட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிருரையில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. கீழ்பவானி வாய்க்காலில் இருந்து வந்த வருமானத்தை வைத்துதான் தாவாச்சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீரை வைத்துதான் தாவாச்சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனாருக்கு இளவராக இருக்கும்போது திருமணம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவருக்கு 16 ஆம் வயதில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற வருடம் 1966 ஆகும். உங்கள் தகப்பனாருக்கு 25 ஆண்டுகள் பூர்த்தியான பிறகுதான்

திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாத்தா கருப்பண்ணகவுண்டர் தாவா பி அட்டவணை சொத்தை வாங்க வேண்டாம் என 1ஆம் பிரதிவாதியிடம் கூறியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எந்த காலத்திலும் 1 ஆம் பிரதிவாதி வீட்டில் இல்லை என்றும், நீங்கள் திருமணத்திற்கு பிறகு உங்கள் கணவர் வீட்டில்தான் குடியிருந்து வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி சொத்தை பிரித்துக் கொடுப்பதற்கு தகராறு செய்தார் என்று சொல்வது பொய் என்றும், அவர் அவ்வாறு தகராறு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியை உடல் நிலை சரியில்லாதபோதும் நீங்கள் அவரை கவனித்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதிதான் 1 ஆம் பிரதிவாதியை கவனித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த பிறகுதான் 2 ஆம் பிரதிவாதி, 1 ஆம் பிரதிவாதியை பார்த்துக்கொண்டார், அதுவரை என் தாயார்தான் 1 ஆம் பிரதிவாதியை பார்த்துக் கொண்டார். 1 ஆம் பிரதிவாதி ஆறு மாதத்திற்கு மேல் ஆஸ்ரம்மத்தில் இருந்தார். 1 ஆம் பிரதிவாதி ஆஸ்ரம்மத்தில் எந்த காலத்திலும் இல்லை என்றும், 2 ஆம் பிரதிவாதிதான் இன்று வரை 1 ஆம் பிரதிவாதியை கவனித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி உங்கள் திருமணத்திற்கு வாங்கிய கடனை அடைப்பதற்கு சொத்தை விற்பதற்கு நீங்கள் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**தானசெட்டில்மெண்ட் சொத்துக்களை 2 ஆம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சிவக்குமாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு தாவாப்படி எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்து தனிப்பட்ட சொத்து என்றும், 1 ஆம் பிரதிவாதிக்குதான் அனைத்து உரிமைகளும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கருப்பண்ணகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் 1 ஆம் பிரதிவாதி கந்தசாமிக்குதான் பாத்தியம் என்றும், அதில் உங்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.